# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109701

1. District மாவட்டம் : The Nilgiris  PS: காவல்நிலையம் V & AC  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 04/2022  Date: நாள் 07.03.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by  Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் —  Date to : நாள் வரை 02.03.2022 at about 12.00hrs +
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் —  Time to : நேரம் வரை 03.03.2022 at about 17.30hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.03.2022  Time நேரம் : 10.30hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —  Time நேரம் : —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at Munnanadu complainant's land and Pandalur surveyor palanisamy quarters. About 70 km west.
   Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Vasudevan  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் s/o. Gopalan chetti (late)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51/22  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Farmer  (g) Address : முகவரி D-No. 2/398, Erani, Munnanadu post, Pandalur (TK), Nilgiris district.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Palanisamy, Surveyor, Taluk office, Pandalur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்  No delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Vasudevan 7/3/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Geethalakshmi 7/3/22
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07·03·2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. GEETHALAKSHMI
Rank: நிலை ......................No. எண் ..........
INSPECTOR OF POLICE
V&AC, THE NILGIRIS.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2022/AC/NI u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்;-**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

07.03.2022-ம் தேதி திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக அலுவலில் இருந்த போது நீலகிரி மாவட்டம், பந்தலூர் தாலுக்கா, முன்னநாடு அஞ்சல், ஈராணி, கதவு எண்.2/398 சேர்ந்த திரு.வாசுதேவன் என்பவர் அலுவலகம் வந்தார். அவரை அலுவலக நுழைவாயிலில் நிறுத்தி அவரை விசாரிக்க, அவர் புகார் கொடுக்க வந்திருப்பதாகக் கூறினார். முதலில் அவரது கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவ செய்தும், பின்னர் அவரது உடல் வெப்ப நிலையையும், ஆக்ஸிஜன் அளவையும் சரிபார்க்கப்பட்டது. உடல் வெப்ப நிலையும், ஆக்ஸிஜன் அளவும் சீராக இருந்தது. அதன்பிறகு அவரை அலுவலகத்திற்குள் அழைத்து அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகார் மனுவை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியானவர் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர் என்றும், பந்தலூர் தாலுக்கா அலுவலகத்தில் நில அளவைப்பிரிவு சம்மந்தமான பணிகளுக்கு பொதுமக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக தெரியவருகிறது. மேலும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையயும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான

தொடர்ச்சி-2 ஆம் பக்கம்

7/3/22

ஒப்புதல் பெற்று இன்று 07.03.2022-ம் தேதி காலை 10.30 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2022/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திரு.பழனிசாமி, சர்வேயர், பந்தலூர் தாலுக்கா அலுவலகம், நீலகிரி மாவட்டம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் K.வாசுதேவன், த/பெ.கோபாலன் செட்டி, கதவு எண்.2/398, ஈரானி, முன்னநாடு அஞ்சல், பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். ஐயா, நான், கடந்த 24 வருடங்களாக நீலகிரி மாவட்டம், பந்தலூர் தாலுக்கா, முன்னநாடு அஞ்சல், ஈரானியில், கதவு எண்.2/398 கொண்ட முகவரியில் எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எனது பூர்வீகம் கேரளா மாநிலம் ஆகும். எனது மனைவியுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லாததால் எனது மனைவியின் அம்மா திருமதி.மீனாட்சியம்மாள் அவர்கள் எங்களுடன்தான் இருக்கிறார். கடந்த 14.02.2022 ஆம் தேதி எனது மாமியார் திருமதி.மீனாட்சியம்மாள் அவர்கள் தனக்கு சொந்தமான முன்னநாடு கிராம புல எண்.35/4-ல் உள்ள 30 சென்ட் விவசாய் நிலத்தை எனக்கு விற்பனை பத்திரமாக கூடலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.191/2022-ன் படி பதிவு செய்து கொடுத்தார். பத்திர பதிவின் தொடர்ச்சியாக பட்டா மாறுதல் செய்வதற்காக கூடலூர் சார்பதிவாளர் அலுவலகம் மூலமே நான் வாங்கிய நிலத்தை உட்பிரிவு செய்வதற்காக ரூ.400/-ஐ (ரூபாய் நாநூறு மட்டும்) கட்டணமாக செலுத்தி விண்ணப்பித்தேன். எனது விண்ணப்ப விவரங்கள் 14.02.2022 ஆம் தேதி விண்ணப்ப எண்.2022/0105/11/023786-ன் படி பந்தலூர் வட்டாட்சியர் அலுவலக முன்னநாடு-1 கிராமம் தொடர்பான குறுவட்ட அளவர்/கிராம நிர்வாக அலுவலருக்கு இணையம் வழியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எனக்கு ஒப்புகைச்சீட்டு எண். TNIGRS/2022/Rural/23723735/14022022130823 வழங்கப்பட்டது. நான் அதையும், பதிவு செய்த பத்திரத்தையும் வாங்கிக்கொண்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

தொடர்ச்சி-3 ஆம் பக்கம்

Geethalakshmi
7/3/22

அதன்பிறகு சுமார் 10 நாட்கள் கழித்து பந்தலூர் தாலுக்கா அலுவலகத்திலிருந்து சர்வேயர் ஒருவர் பேசுவதாக செல்போன் எண் 6380527856 மூலம் எனது செல்போன் எண்.9544764714-ல் தொடர்பு கொண்டு, எனது மாமியார் திருமதி.மீனாட்சியம்மாள் அவர்களிடமிருந்து நான் வாங்கிய நிலத்தை உட்பிரிவு செய்வது தொடர்பாக என்னிடம் பேசி அந்த இடத்தை அளக்க 01.03.2022 ஆம் தேதி செவ்வாய்கிழமை வருவதாக கூறினார். அதனால் நான் செவ்வாய்கிழமை மாலைவரை சர்வேயர் வருவார் என நான் காத்திருந்தேன். ஆனால் சர்வேயர் அன்றைய தினம் வரவில்லை. மறுநாள் 02.03.2022 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் பந்தலூர் தாலுக்கா அலுவலகத்திலிருந்து வந்துதுள்ள சர்வேயர் என்றுச்சொல்லி திரு.பழனிசாமி அவர்கள் இருசக்கர வாகனத்தில் இன்னொருவரையும் அழைத்துக்கொண்டு நான் வாங்கிய நிலத்திற்கு வந்து நிலத்தை உட்பிரிவு அளந்தார். அவர் அளந்து முடிக்கும்வரை நான் அவருடனேயே இருந்தேன். அவர் நிலத்தை அளந்து முடித்தபிறகு, எனது நிலத்தை உட்பிரிவு செய்வதற்காக நிலத்தை அளந்து கொடுத்து அதற்கான அறிக்கையை மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு தனக்கு லஞ்சமாக 7,000/- ரூபாய் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் அவ்வளவு பணம் இல்லையென்றும், கஷ்டமாக இருப்பதாகவும் கூறினேன். அதற்கு அவர் 10 சென்ட் முதல் ஒரு ஏக்கர் வரை உட்பிரிவு செய்யும் நிலங்களுக்கு 7,000/- ரூபாயை நில உரிமையாளர்களிடமிருந்து வாங்குவது வழக்கம் என்றும், 7,000/- ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு தன்னுடைய அலுவலகம் உள்ள பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 03.03.2022 ஆம் தேதி காலை 9.00 மணிக்குள்ளோ இல்லையென்றால் மாலை 05.00 மணிக்கு பிறகோ தனது அலுவலகம் வந்து பணத்தை கொடுக்குமாறும், பணத்தை கொடுத்தால் மட்டுமே எனது நிலத்தை உட்பிரிவு செய்து கொடுப்பதாகவும் கண்டிப்புடன் கூறினார். அதனால் நான் 03.03.2022 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு முன்போ அல்லது மாலை 05.00 மணிக்கு பிறகோ வந்து பணத்தை கொடுக்குமாறும், பணத்தை கொடுத்தால் மட்டுமே எனது நிலத்தை அளந்ததற்கான அறிக்கையை மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதாகவும்

தொடர்ச்சி-4 ஆம் பக்கம்

Geethyalakshmi
7/3/22

கண்டிப்புடன் கூறினார். அதனால் நான் 03.03.2022 ஆம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் சர்வேயர் திரு.பழனிசாமி அவர்களை சந்திப்பதற்காக பந்தலூர் தாலுக்கா அலுவலக கட்டிடத்தில் உள்ள நில அளவைப்பிரிவிற்கு சென்று பார்த்தபோது, சர்வேயர் திரு.பழனிசாமி அவர்கள் அங்கு இல்லையென்றும், அலுவலகத்திற்கு வந்துவிட்டு வெளியில் சென்றுவிட்டதாகவும் தெரிவித்ததால், நான் அவருடைய செல்போனில் தொடர்புகொண்டு பேசியபோது, தான் பந்தலூர் கோர்ட் அருகில் உள்ள அரசு குடியிருப்பில் இருப்பதாகவும், அங்குவந்து தன்னை பார்க்குமாறும் கூறினார். அதன்பிறகு நான் அவர் சொன்ன குடியிருப்புக்கு சென்று அவரை சந்தித்து, அவர் கேட்ட பணம் ரூ.7,000/- ரூபாய் ரெடி பண்ணமுடியவில்லை என்றும், தெரிந்தவர்களிடம் கேட்டுள்ளேன் என்றும், அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியாது என்றும் கூறினேன். அதற்கு அவர் 1,000/- ரூபாயை குறைத்து 6,000/- ரூபாயை வருகின்ற திங்கட்கிழமை 07.03.2022 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு கொண்டுவந்து கொடுத்தால்தான் என்னுடைய நிலத்தை உட்பிரிவு செய்து கொடுப்பதாக கண்டிப்புடன் கூறினார். அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்று யோசித்தபோது, அரசு பணியை செய்வதற்கு லஞ்சமாக பணம் கேட்கும் சர்வேயர் திரு.பழனிசாமி அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால், லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்க முடிவு செய்து, எனக்கு தமிழ் மொழியில் பேச் மட்டுமே தெரிந்ததால், எனக்கு தெரிந்தவரிடம் சர்வேயர் திரு.பழனிசாமி அவர்கள் மீது புகார்மனு எழுதி வாங்கி கணினியில் தட்டச்சு செய்து சர்வேயர் திரு.பழனிசாமி அவர்கள் லஞ்சமாக கேட்ட 6,000/- ரூபாய் பணத்தை தயார்செய்து கொண்டுவந்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். எனவே, என்னிடம் 6,000/- ரூபாய் லஞ்சமாக பணம் கேட்ட பந்தலூர் தாலுக்காவின் சர்வேயர் திரு.பழனிசாமி அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (XXXX) 07.03.2022. Submitted: Received the above complaint on 07.03.2022 at 09.30 hrs and conducted a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.4/2022 u/s 7 of

தொடர்ச்சி-5 ஆம் பக்கம்

Jayalakshmi
7/3/22

PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 07.03.2022 at 10.30 hrs. Sd (XXXX) 07.03.2022 Inspr. VAC. The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

(B.கீதாலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.